# <u>சாதாரணக்கூட்டம்</u>

**2022 – ம் ஆண்டு மார்சு மாதம் 31ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.10 மணிக்கு வடலூர் நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக்கூட்டம் நகர்மன்றதலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.**

**முன்னிலை: திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்றதலைவர், வடலூர் நகராட்சி.**

## <u>பொருள் எண். 1</u>

கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சியினைநகராட்சியாகதரம் உயர்த்தப்பட்டுஏற்கனவேஇருந்த 18 வார்டுகள் 27 வார்டுகளாகஎல்லைமறுவரையறைசெய்யப்பட்டுஇயங்கி வருகிறது. 3 வருவாய் கிராமங்களைஉள்ளடங்கிய இந்நகராட்சியின்மொத்தபரப்பளவு 19.93 சதுர கிமீ ஆகும். 108.766 கிமீ நீளம் கொண்ட 551 தெருக்களைஉள்ளடங்கிவுள்ளஇந்நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள்தொகைகணக்கெடுப்பின்படிமக்கள்தொகை 39514. தற்போதையமக்கள்தொகை 51800 ஆகும். இந்நகராட்சியில்பொதுசுகாதாரபணிகள்,குடிநிர் விநியோகபணிகள்,தெருமின் விளக்குபராமரித்தல்மற்றும் நடைபெற்றுவரும் திட்டப்பணிகள்ஆகியவற்றினை தினசரி தல ஆய்வு மேற்கொள்ளவாகனம் தேவைப்படுகிறது. மேலும் நகராட்சிநிர்வாக உயர் அலுவலர்களது ஆய்வு கூட்டங்களில்ஆணையர், நகராட்சிபொறியாளர் ஆகியோர்கலந்துகொள்ளசென்னைமற்றும் கடலூர் செல்லவாகனம் தேவைப்படுவதாலும்மற்றும் நகராட்சிதலைவர் அவர்கள்நகரினை ஆய்வு மேற்கொள்ளவாகனம் தேவைப்படுகிறது. எனவேஇந்நகராட்சிக்குBolero ஈப்பு வாகனம் 3 எண்ணிக்கைகள்வாங்குவதற்கும்,மேற்படிசெலவினத் தொகையினைநகராட்சியின் பொதுநிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு. மேலும், நகர்மன்றதலைவர் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணைஅனுப்பியதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

## <u>பொருள் எண். 2</u>

வடலூர் பேரூராட்சிஅரசாணைஎண். 116 நாள் 07.12.2021 முதல் இரண்டாம் நிலைநகராட்சியாகதரம் உயர்த்தப்பட்டுகடந்த 17.12.2021 முதல் செயல்பட்டுவருகின்றது. இந்நகராட்சி 19.93 சதுரகீலோமீட்டர் பரப்பளவுகொண்டநகராட்சியாகும். 2011 ம் ஆண்டுமக்கள் தொகைஅடிப்படையில் 39514 மக்கள் தொகைகொண்டநகராட்சியாகும். மேலும், இந்நகராட்சிவளர்ந்துவரும் நகராட்சிஎன்பதால் பொறியாளர் பிரிவிற்கு

1. BE (Civil) 1 எண்ணிக்கை
2. DCE(Civil) 1 எண்ணிக்கை.

மேற்காணும்தொழில்நுட்பஉதவியாளர்கள்நிர்வாகநலன் கருதியும்,பொதுமக்கள் நலன்கருதியும் 6 மாதகாலத்திற்குபணியமர்த்திக்கொள்ளவும்,ஊதியம் வழங்கவும் ஊதியத்திற்கானதோராயமதிப்பீடு 5,00,000/- (ரூபாய் ஐந்துலட்சம் மட்டும்) இந்நகராட்சிவருவாய் நிதியிலிருந்துசெலவினம் மேற்கொள்ளமன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண். 3

வடலூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு 2021-2022 Tied grant மற்றும் Untied grant திட்டத்தின் கீழ்நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகுறுஞ்செய்திக்கிணங்ககீழ்காணும்விவரப்படிபணிகள்தேர்வுசெய்யமன்றத்தின்ஒப்புத லுக்குவைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுதொகை(இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 3 எண்ணிக்கை LCV வாகனம் வாங்கி வழங்கும் பணி | 21.00 |
| 2 | 10 எண்ணிக்கை BOV வாகனம் வாங்கி வழங்கும் பணி | 18.50 |
| 3 | வார்டு 01 பூசாலிக்குப்பம் குப்பை இடங்களில் 2 MT நுண்ணுயிர் உரமாக்கும் குடில்அமைத்தல்(MCC) பணி | 9.96 |
| 4 | வார்டு எண் 8 என்.எல்.சி ஆபிஸர் நகரில்அமைந்துள்ளRCC மையம் (வலம் மீட்பு பூங்கா) பராமரிப்புமற்றும் புனரமைக்கும் பணி | 9.96 |
| 5 | வார்டு எண் 8 என்.எல்.சி ஆபிஸர் நகரில்புதியதாகஆழ்துளை கிணறுஅமைக்கும் பணி | 9.96 |
| 6 | வார்டு எண் 14 ஜோதிநகரில்புதியதாகஆழ்துளை கிணறுஅமைக்கும் பணி | 9.97 |
| 7 | வார்டு எண் 15 இந்திராநகர் பகுதியில்புதியதாகஆழ்துளை கிணறுஅமைக்கும் பணி | 9.97 |
| 8 | வார்டு எண் 09 ஷேஷாயிநகர் பகுதியில்புதியதாகஆழ்துளை கிணறுஅமைக்கும் பணி | 9.95 |
| 9 | வடலூர் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகளில்அமைந்துள்ளஆழ்துளை கிணறுகளுக்குதேவையானபோர்கள், பேனல்போர்டு, ஸ்டார் மற்றும் கேபிள்கள் வாங்கும் பணி | 9.95 |
| 10 | வடலூர் நகராட்சிக்குJCBவாகனம்(30X )வாங்கும் பணி | 32.00 |
| 11 | வார்டு எண் 01 பூசாலிக்குப்பம் குப்பை கிடங்கிற்கு குப்பைகள்அறைக்கும் இயந்திரம்(Organic Shredder) வாங்கி பொருத்தும் பணி . | 7.64 |
| | மொத்தம் | 148.86 |

மேற்காணும் பணிகளுக்குமதிப்பீடுதொகைவிவரம் 15 CFCநிதிகள்கீழ்மேற்கொள்ளமன்றத்தின்ஒப்புதலுக்கு.

பொருள் எண். 4

வடலூர் நகராட்சிவார்டு எண் 26 ஆர் சி காலணிபகுதியில்சுமார் 280 குடும்பங்கள் வசிக்கின்றனர். மேற்காணும் பகுதியில்பொதுமக்களுக்குபோதியகுடிநீர் கிடைக்காதாதாலும் எதிர்வரும் கோடைகாலத்தைகருத்தில்கொண்டும் புதியதாகஆழ்துளை கிணற்றுடன் சின்டெக்ஸ் டேங்ஸ் அமைக்கதயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்குமன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண். 5

வடலூர் நகராட்சிவார்டு எண் 02 வடக்குதெருவில்சுமார் 450 குடும்பங்கள்வசிக்கின்றனர். மேற்கண்டப் பகுதிக்குPPS நகரில்உள்ளOHT யிலிருந்துசுமார் 900மீ தொலைவிலிருந்துகுடிநீர் பகிர்மானகுழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. மேற்காணும் வடக்குதெருமேடாகஉள்ளதாலும் தூரமும் அதிகமாகஉள்ளதால்போதியகுடிநீர் வடக்குதெருபகுதிக்கு கிடைக்கவில்லை.எதிர்வரும் கோடைகாலத்தைகருத்தில்கொண்டுவடக்குதெருபகுதியில்புதியதாகஆழ்துளை கிணறுஅமைத்துசின்டெக்ஸ் டேங்ஸ் அமைக்கதயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்குமன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண். 6

வடலூர் நகராட்சிவார்டு எண் 05 பழைய இபி ஆபிஸ் தெருவில்உள்ள 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளவுகொண்டமேல்நிலை நீர்தேக்கதொட்டி மூலம் வார்டு 1, 5, 6 மற்றும் 9 பொதுமக்களுக்குகுடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கண்டOHT வளாகத்தில்உள்ளஇரண்டுஆழ்துளை கிணறு மூலம் போதியகுடிநீர் ஏற்றி வழங்கஇயலாதநிலையில்உள்ளதால் மேற்காணும் மேல்நிலைநீர்தேக்கதொட்டிக்குபுதியதாகஆழ்துளை கிணறுஅமைக்கதயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ.9.95 இலட்சத்திற்குமன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண். 7

வடலூர் நகராட்சி 19.93 சதுர கிமீ பரப்பளவுகொண்டஇரண்டாம் நிலைநகராட்சியாக 30000 கொள்ளளவுகொண்ட ஐந்து மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி, 60000 கொள்ளளவுகொண்ட 14 எண்ணிக்கைமேல்நிலை நீர்த்தேக்கதொட்டி, 100000 கொள்ளளவுகொண்ட 5 எண்ணிக்கைமேல்நிலை நீர்த்தேக்கதொட்டி, 300000 கொள்ளளவுகொண்டஇரண்டுதொட்டிமற்றும் 400000 கொள்ளளவுகொண்டஇரண்டுமேல்நிலை நீர்த்தேக்கதொட்டிஆக மொத்தம் 28 மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி மூலம் பொதுமக்களுக்குகுடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டிக்கு 29 எண்ணிக்கைஆழ்துளை கிணறு மூலம் நீர் ஏற்றம் செய்யப்படுகிறது.இந்தஆழ்குழாய் கிணறுமோட்டார்களில்அவ்வப்போதுஏற்படும் பழுதுகள்சரிசெய்துகுடிநீர் வாங்கஒரிருநாட்கள்தேவைப்படுவதால்அப்பகுதிபொதுமக்கள்குடிநீர் இல்லாமல்மிகுந்தபாதிப்புக்குஉள்ளாகின்றனர். எதிர்வரும் காலம் கோடைகாலம் என்பதாலும் இந்நகராட்சியில்குடிநீர் வாகனம் இல்லாததாலும் வாடகைஅடிப்படையில்குடிநீர் பாதிக்கப்படும் பகுதியில்டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கதயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ. 60000/க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண்:8

வடலூர் நகராட்சி 2011ம் ஆண்டுமக்கள் தொகைஅடிப்படையில் 39514 மக்கள் தொகைகொண்டநகராட்சியாகும். மேலும், இந்நகராட்சின்தற்போதையமக்கள் தொகை58100ஆகும். இந்நகராட்சியில் உருவாகும் ஒருநாளையகுப்பையின் அளவு 8.00டன் ஆகும். 8.00 டன் குப்பையைகொட்டிதரம்பிரிப்பதற்குபோதுமானகுப்பைகிடங்குவசதி இல்லாதகாரணத்தினால் தனியாரிடம் ஒப்பந்தஅடிப்படையில் ஆண்டுவாடகைரூ. 36000/- வழங்கப்பட்டுவருவதற்கும் மன்றஒப்புதல்வழங்கலாம், மேலும்வடலூர் நகராட்சிக்குகுப்பைகிடங்குஅமைக்கநிரந்தரமான இடம் தனியாரிடம்வாங்கவும் அதற்காகும் செலவினத்திற்கும்மன்றஒப்புதலுக்கு.

பொருள் எண்: 9

27 வார்டுகளைக் கொண்ட1வடலூர் நகராட்சிக்குசொந்தமானகொசுமருந்துஅடிக்கும் இயந்திரம் பழுதடைந்தகாரணத்தினால் கொசுமருந்துஅடிக்கும் பணிதொய்வடைந்துள்ளது. இதனால் டெங்குகொசுக்கள் பெருகும் அபாயம் உள்ளது. எனவே, இந்நகராட்சில் உள்ளபெரியகொசுமருந்துஅடிக்கும் இயந்திரத்தினைபழுதுபார்க்கவும்,அதற்கானசெலவினம் இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண10.

வளர்ந்துவரும் இந்நகராட்சியின் மக்கள் தொகைக்கேற்ப இறந்தவர்களைஅடக்கம் செய்யபோதுமானஇடவசதி இல்லாதகராணத்தினால் அய்யன் ஏரிக்கரையில்அடக்கம் செய்யப்பட்டுவருகிறது.இதனால் அய்யன் ஏரியின் தண்ணீர் மாசுபடவாய்ப்புள்ளது. எனவே,அனைத்துமக்களுக்கும் பயன்படும்விதமாகபொதுவானமின் மயானம் அமைக்க இடம் தேர்வுசெய்துதனியாரிடத்தில் வாங்கவும்,அதற்கானசெலவினத்திற்கும்மன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண்: 11

இந்நகராட்சிக்குசொந்தமானடிராக்டர் மற்றும் கழிவுநீர் டேங்கர் வாகனம் (எண் (T.N.31A9471) பழுதடைந்துஉபயோகப்படுத்தமுடியாமல் உள்ளது. மேற்படிவாகனத்தைஅரசுஅனுமதிபெற்றமோட்டார் பழுதுபார்க்கும் நிறுவனத்தில் பழுதுநீக்கம் செய்யவும்,அதற்கானசெலவினத்தை இந்நகராட்சிபொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண்: 12.

இந்நகராட்சிக்குசொந்தமானபொதுசுகாதாரவாகனங்கள்எண் (T.N.31 CA7815) 2021-2022 ம் ஆண்டில்FCமுடிவடைந்துள்ளதால் மேற்படிவாகனத்தைபுதுப்பிக்கஅரசுஅங்கீகாரம் பெற்றமோட்டார் பழுதுபார்க்கும் நிறுவனத்தில் பழுதுபார்த்துவட்டாரபோக்குவரத்துஅலுவலகத்தில் FC செய்யவும்,அதற்கானசெலவினத்தைஇந்நகராட்சிபொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண்: 13

இந்நகராட்சிக்குசொந்தமானபொதுசுகாதாரவாகனம் (எண் (TN.31 PH 9169) மற்றும்(TN.31 AB 3855) TATA ACE) வாகனம் பழுதடைந்து இயக்கமுடியாமல் உள்ளதால் மேற்படிவாகனங்களைஅரசுஅங்கீகாரம் பெற்றநிறுவனத்தில் பழுதுநீக்கம் செய்யவும்,அதற்கானசெலவினத்தை இந்நகராட்சிபொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண்: 14

வடலூர் நகராட்சிவார்டு எண்.1 முதல் 27 வார்டுகளையும் 19.93ச.கி.மீபரப்பளவும் கொண்டஇரண்டாம் நிலைநகராட்சியாகும். இந்நகராட்சியில்பேரூராட்சியாகஇருந்தபோதுசுமார் 10 ஆண்டுகளுக்குமுன்புபிரதானகுடிநீர் குழாய் 63mm (2”) PVC பைப்பு மூலம் அமைக்கப்பட்டதால்பலஇடங்களில்பொதுமக்களுக்குபோதியகுடிநீர் விநியோகம் செய்யமுடியவில்லை.பலபகுதிகளில்பிரதானகுடிநீர் குழாயில்மரத்தின் வேர்கள்புகுந்துஅடைப்புஏற்பட்டுள்ளது. எனவே, வார்டு எண் 15 முதல் 27 வார்டுகளில் 90mmPVCகுடிநீர் பகிர்மானகுழாய்கள்அமைக்கதயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்குமன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண்: 15

வடலூர் நகராட்சிவார்டு எண்.1 முதல் 27 வார்டுகளையும் 19.93ச.கி.மீபரப்பளவும் கொண்டஇரண்டாம் நிலைநகராட்சியாகும். இந்நகராட்சியில்பேரூராட்சியாகஇருந்தபோதுசுமார் 15ஆண்டுகளுக்குமுன்புபிரதானகுடிநீர் குழாய் 63mm (2”) PVC பைப்பு மூலம் குடிநீர் பகிர்மானகுழாய்அமைக்கப்பட்டதால்பலவார்டுகளில்பொதுமக்களுக்குபோதியகுடிநீர் விநியோகம் செய்யமுடியவில்லை. பலஇடங்களில்மரத்தின் வேர்கள்குடிநீர் பகிர்மானகுழாய்களில்அடைப்பைஏற்படுத்தியதன் மூலம் சீரானகுடிநீர் விநியோகம் செய்யமுடியவில்லை.எனவே, வார்டு எண் 01 முதல் 14 வரைஇந்நகராட்சியின் முக்கியபிரதானகுழாய்களில் 90mm PVC குழாய்களாகமாற்றி அமைக்கதயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்குமன்றத்தின் ஒப்புதலுக்கு

பொருள் எண்: 16

வடலூர் நகராட்சிவார்டு எண்.1 ஆபத்தாரணபுரம் 3.00 LL OHT வார்டு 20 சந்தை 3.00 LL OHT வார்டு எண் 23 சபை 4.00 LL OHT மற்றும் வார்டு எண் 7 காட்டுக்கொல்லை 4.00 LL OHT யின் படிகட்டுகள் இடிந்து கீலகமாக ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்காணும் படிகட்டுகள் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் மேல் ஏரி சுத்தம் செய்ய இயலாதா நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்களின் குடிநீர் பாதுகாப்பு நலன் கருதியும் சுகாதாரமான குடிநீர் வழங்க மேற்காணும் நான்கு OHT க்கும் இரும்பினால் ஆன படிகட்டுகள் ( Steel Lader) கட்டவும் மேலும் வார்டு எண் 16 ராஜமாணிக்கம் நகர் 0.30 LL கொள்ளவு கொண்ட OHT மற்றும் வார்டு எண் 10 பாலாஜி நகரில் உள்ள 0.60 LL OHT க்கு நீர் ஏற்றும் பிரதான குழாய் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது அதனை சரிசெய்து நீர் ஏற்றவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண்: 17

கடலூர் மாவட்டம் , வடலூர் நகராட்சி பேரூராட்சியாக இருந்தபோது 2020–2021ம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதியில் கீழ்காணும் பணி தேர்வு செய்து ஒப்பந்தபுள்ளி கோரி குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் பணி துவக்கப்பட்டதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 1 வேலாயுதம் நகரில் பூங்காஅபிவிருத்திபணிகள்மேற்கொள்ளுதல் | 20.00 |
| 2 | வார்டு எண். 3 பிபிஎஸ் நகரில் பூங்காஅபிவிருத்திபணிகள்மேற்கொள்ளுதல் | 20.00 |
| 3. | வார்டு எண். 11 ஜோதி நகரில் பூங்காஅபிவிருத்திபணிகள்மேற்கொள்ளுதல் | 20.00 |
| 4. | வார்டு எண். 12 நாகேசன் செட்டியார் நகரில் பூங்காஅபிவிருத்திபணிகள்மேற்கொள்ளுதல் | 10.00 |
| 5. | வடலூர் பேரூராட்சி பகுதியில் 900 மரக்கன்றுகள் நடுதல் பணி மேற்கொள்ளுதல் | 2.40 |
| | மொத்தம் | 72.40 |

பொருள் எண்: 18

வடலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்கவும் மற்றும் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாதபூசம் அன்று மதுக்கடைகள் மற்றும் ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற உயிரினங்களை வெட்டும் இடங்களையும், மாமிசம் மற்றும் புலால் விற்பனை செய்யும் கடைகளையும், அசைவ உணவு விடுதிகளையும் மூடி வைத்திடவும் மற்றும் மீன் மற்றும் மாமிசம் விற்பனை செய்யும் நபர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைக்காமல் வேறு இடத்தில் விற்பனை செய்யும் நபர்கள் மீது அபராதம் விதிக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

பொருள் எண்.

வடலூர் நகராட்சிவார்டு எண் 26 ஆர். சி .தோமையார் நகர் மகளிர் கழிப்பறை பழுதுநீக்கம் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

பொருள் எண்.

வடலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறை, நகர்மன்ற கூட்ட அறங்கு பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய கழிவறை கட்டும் பணிக்கு அவசர அவசியம்

கருதி நகராட்சி விதி எண் 15–ன் கீழ் ரூ.7.60 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும்.

பொருள் எண்.

வடலூர் நகராட்சியில் நடைபெற்று முடிந்த உள்ளாட்சி தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகளாக தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள் மற்றும் நகர் மன்ற கூட்ட அறைக்கு தேவையான மேசைகள், நாற்காலிகள், மின் விசிறிகள் மற்றும் இதர முன்னேற்பாடு பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15–ன் கீழ் ரூ.4.41 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும்.

பொருள் எண்.

வடலூர் பேரூராட்சி தரம் உயர்த்தப்பட்டு நகராட்சியாக மாறுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அலுவலகத்தில் பெயர் பலகை மாற்றம் செய்தல் மற்றும் இதர பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15–ன் கீழ் ரூ. 1.00 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும்.

பொருள் எண்.

வடலூர் நகராட்சியில் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு கீழ்காணும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள நகராட்சி விதி எண் 15–ன் கீழ் ரூ. 3.50 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும்.

1. வாக்குச்சாவடி மையங்களில் சாய்வு தளம் அமைத்தல்,
2. குடிநீர் வசதி, கழிவறை வசதி,
3. மின்விளக்கு வசதி மற்றும் Focus light வசதிகள் அமைத்தல்,
4. வாக்குபதிவு நடைபெறும் நாளில் வாக்கு சாவடிக்கு முன் பகுதியில் தேவையான இடங்களில் சார்மியான பந்தல், டேபிள்கள், சேர்கள் வாடகை முறையில் அமைத்தல்.

பொருள் எண்.

வடலூர் நகராட்சியில் சத்திய ஞான சபையில் நடைபெற்ற தைப்பூச திருவிழாவை முன்னட்டு சபை வளாகத்தில் உள்ள உயர்மின் கோபுரம் மின்னழுத்தம் காரணமாக 4*16 sqmm கேபிள் மற்றும் 150 வாட் LED பிட்டிங் 8 எண்ணிக்கைகள் மற்றும் தேவையான உதிரி பாகங்கள் சரி செய்வதன் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15–ன் கீழ் ரூ. 1.47 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும்.

நகர் மன்றதலைவர்
வடலூர் நகராட்சி.